JUDICIAL FORM NO.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - Pw-2  Witness
for Prosecution

| CC.No. | 222/2025 | Crime No. | 50/2024 | Station | Ammapet |
|---|---|---|---|---|---|

| | | |
|---|---|---|
| Name | **Pw-2-அம்பேத்கார்** | Village |
| Father's Name/Husband's Name | | Taluk |
| Age | | Calling |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 24th day of February 2026 | | |

**எதிரி ஆஜர் இல்லை**

**முதல் விசாரணை**

நான் தற்போது குறிச்சியில் குடியிருந்து கொண்டு, வெல்டிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 2 வருடங்களுக்கு முன்பு மாலை 03.00- 3:30 மணிக்கு நான் குறிச்சியில் வேலை செய்து கொண்டிருந்தேன். குறிச்சி பிரிவு அருகே ஒரு ஆட்டோ கவிழ்ந்து விட்டது என்று ஒரு அம்மா ஓடிவந்து என்னிடம் சொன்னார். நான் சென்று பார்த்தபோது 2-3 நபர்களுக்கு அடிபட்டு இருந்தது. விபத்து குறித்து நான் விசாரித்தபோது அந்த 2-3 நபர்களுக்கும் ஆட்டோ கவிழ்ந்ததில் அடிபட்டதாக சொன்னார்கள். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்க, நடந்த விபரங்களை சொன்னேன்.

**சாட்சி அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளதால் சாட்சியை பிறழ் சாட்சியாக குறுக்கு விசாரணை மேற்கொள்ள நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை-**

கடந்த 09.02.2024 ஆம் தேதியன்று, நான் வேலைக்கு சென்று விட்டேன். திரும்ப எனது வீட்டிற்கு வர வேண்டி நானும், மற்றவர்களும் குறிச்சி ரோட்டில் எனது மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தோம் என்றும் வரும்போது வழியில் மாலை சுமார் 03.20 மணிக்கு சித்தார், குறிச்சி ரோட்டில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்தபோது குறிச்சி ரைஸ்மில் அருகில் உள்ள இரண்டாவது வளைவில் வந்து கொண்டிருந்தபோது அதே ரோட்டில் எங்களுக்கு முன்னால் TN 36 AB 1711 என்ற பதிவு எண் கொண்ட ஆட்டோ பயணிகளை ஏற்றுக் கொண்டு போய்க் கொண்டிருந்தது என்றும் அப்போது அந்த ஆட்டோவின் ஓட்டுநர் ஆட்டோவை திடீரென்று அதிவேகமாகவும். அஜாக்கிரதையாகவும். கவனக்குறைவாகவும் ரோட்டின் வலது

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.24 06:33:26 +0530

புறமாக ஏறி ஓட்டிச் சென்று அதே அளவில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த TN 81, 2163 என்ற பதிவு எண் கொண்ட போஃர்டு காரின் மீது ஆட்டோ போய் மோதி விபத்தை ஏற்படுத்தினார் என்றும் ஆட்டோ, கார் மீது மோதியதும் ஆட்டோ குப்புற கவிழ்ந்து விட்டது என்றும் ஆட்டோவில் இருந்த பயணிகள் சத்தம் போட அங்கு வந்த நானும், முனியப்பன் மற்றும் மலைச்சாமி மற்றவர்களும் ஆட்டோவில் இருந்தவர்களை தூக்கி வெளியில் எடுத்து பார்த்தபோது உலகடம், குட்டைமேட்டை சேர்ந்த ரவி மனைவி செல்வி என்றும் கந்தசாமி என்றும் தெரியவந்தது என்றும் ஆட்டோ ஓட்டுநர் பற்றி விசாரிக்க குறிச்சியை சேர்ந்த அலெக்சாண்டர் மகன் இளவரசன் என்றும் அவருக்கு காயம் ஏற்பட்டும், செல்விக்கு மூக்கில் இரத்தக்காயமும், இடது பக்க கன்னம் அருகில் இரத்தக்காயமும் ஏற்பட்டிருந்தது என்றும் கந்தசாமிக்கு வலது பக்க தலையில் இரத்த காயமும், வலது பக்க கண் புருவத்தில் இரத்தக்காயமும் மற்றும் தாடையில் இரத்தக்காயமும் ஏற்பட்டது என்றும் விபத்தை நான் நேரில் பார்த்தேன் என்றும் போலீசார் விசாரணையின்போது சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக் கொண்டதற்காக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

எதிரி ஆஜர் இல்லை, எதிரி தரப்பில் மனு அளிக்கப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை. எதிர் தரப்பிற்கு போதிய வாய்ப்பளிக்கப்பட்டும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை. மாண்புமிகு உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின்படி குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**மறு விசாரணை இல்லை**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.02.24 06:33:33 +0530

Sd/- (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani